மாலை முரசு

பக்கங்கள் 18 + 03

## துமிந்தவுக்கு மறியல் ஜூன் 5 வரை நீடிப்பு



முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவை எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிஸை

02

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | வைகாசி 15 வியாழக்கிழமை 29.05.2024 | அதிர்வு 299

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்




# முன்னாள் அமைச்சர்கள் இருவருக்குக் கடூழியச் சிறை

## ■ மஹிந்தானந்தவுக்கு 20 வருடங்கள்
## ■ நளினுக்கு 25 வருடங்கள்

### கொழும்பு மேல் நீதிமன்றம் அதிரடி உத்தரவு

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு 20 வருட கடூழியச் சிறைத் தண்டனையும், முன்னாள் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவுக்கு 25 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. பிரதிவாதிகளுக்கு எதிராக

03



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# பாணந்துறையில் துப்பாக்கிச் சூடு!

## ஒருவர் படுகாயம்

களுத்துறை மாவட்டம் பாணந்துறை, வேகட பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இன்று வியாழக்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

பாணந்துறை, வேகட பிரதேசத்துக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இனந்தெரியாத இருவர், மோட்டார் சைக்கிள்களின் உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் கடை ஒன்றில் இருந்த பணியாளர் ஒருவர் மீது துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் சிகிச்சைக்காகப் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# சுன்னாகத்தில் பொலிஸ் விசேட சோதனை! போதைப்பொருள்களுடன் எழுவர் கைது!!

யாழ்ப்பாணம், சுன்னாகம் பொலிஸ் பிரிவில் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கைகளின்போது எழுவர் போதைப்பொருள்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் மூவர் போதை மாத்திரைகளுடனும், இருவர் ஐஸ் போதைப்பொருளுடனும், மேலும் இருவர் ஹெரோயின் போதைப் பொருளுடனும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் ஒருவர், 3.2 கிராம் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளார். அவருக்கு எதிராக ஏற்கனவே 8 கிராம் ஹெரோயினுடன் தொடர்புடைய வழக்கு ஒன்று நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் மீது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## துமிந்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிவான் நீதிமன்றம் இன்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள சொகுசு தொடர்மாடி குடியிருப்பு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரில் இருந்த பெண்ணிடம் இருந்து தங்க முலாம் பூசப்பட்ட ரி - 56 ரக துப்பாக்கி ஒன்று பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், முன்னாள் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க கொழும்பு, பம்பலப்பிட்டி பிரதேசத்தில் வைத்து கடந்த 23 ஆம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை விளக்கமறியலில் வைககுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இதனையடுத்து சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த துமிந்த திஸநாயக்க, சுகயீனம் காரணமாகக் கடந்த 25ஆம் திகதி சிறைச்சாலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை (27) மீண்டும் மகசின் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில், துமிந்த திஸாநாயக்க இன்று மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நீர்கொழும்பிலும் துப்பாக்கிச் சூடு!

## உயிர்ச் சேதம் இல்லை

நீர்கொழும்பு, தலாதுவ பிரதேசத்தில் நேற்று புதன் கிழமை மாலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள் ளது என்று நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

தலாதுவ பிரதேசத்தில் இரு நபர்களுக்கு இடையில் தகராறு ஏற்பட்டுள்ளது. இதன்போது ஒருவர் மற்றைய நபர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

எவ்வாறிருப்பினும், துப்பாக்கிச் சூட்டின் போது எந்தவித உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து தகராறில் ஈடுபட்ட நபர்கள் இருவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூடு நடத்திய நபர் வர்த்தகர் ஒருவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் நீர்கொழும்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மகசின் சிறைச்சாலை அதிகாரி கைது!

கொழும்பு, மகசின் சிறைச்சாலைக்குள் போதைப் பொருள்களைக் கொண்டு செல்ல முயன்ற சிறைச்சாலை அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொரளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரான சிறைச்சாலை அதிகாரி மகசின் சிறைச்சாலைக்குச் சென்றிருந்த போது சிறைச்சாலை அதிகாரிகளால் சோதனைக்குட் படுத்தப்பட்டார்.

இதன்போது சந்தேகநபரான சிறைச்சாலை அதிகாரியிடமிருந்து 16,112 மில்லிகிராம் ஹெரோயின், 12,924 மில்லிகிராம் ஐஸ் மற்றும் 73,855 மில்லிகிராம் புகையிலை உள்ளிட்ட போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்துக் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொரளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொரளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரம்போர்ட் கொடுக்கல் – வாங்கல் தொடர்பில் இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பு இன்று அறிவிக்கப்பட்டது.

மேல் நீதிமன்ற நீதிபதிகளான அதன் தலைவர் பிரதீப் ஹெட்டியாரச்சி, பிரதீப் அபேரத்ன உள்ளிட்ட மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் இந்தத் தீர்ப்பை அறிவித்தது.

பிரதிவாதிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் நியாயமான சந்தேகத்துக்கு அப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளன என்று நீதிபதிகள் குழாம் தெரிவித்தது.

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் முன்னாள் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக 2014 செப்டம்பர் முதலாம் திகதி முதல் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 14 ஆயிரம் கரம்போர்ட்கள் உள்ளிட்ட விளையாட்டு உபகரண இறக்குமதியின் போது 53.1 மில்லியன் ரூபா மோசடி செய்ததாக இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் 6 குற்றப்பத்திரிகைகளின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 70ஆம் சரத்தின் கீழ் பிரதிவாதிகள் இருவருக்கு எதிராக இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.

நளின் பெர்னாண்டோ சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா ஆஜரானதுடன் மஹிந்தானந்த அளுத்கமகே சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஷானக்க ரணசிங்க ஆஜரானார்.



# அமரர் ஆறுமுகன் தொண்டமானின் 61 ஆவது ஜனன தினம் அனுஷ்டிப்பு

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும் அமைச்சருமான அமரர் ஆறுமுகன் தொண்டமானின் 61 ஆவது ஜனன தினம் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

கொட்டகலை சி.எல்.எப் ஆறுபடை தாயுமான சிவன் ஆலய வளாகத்தில் விசேட பூஜை வழிபாடுகளுடன் அன்னாரின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து ஜனன தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதேவேளை, இ.தொ.கா. தலைமைக் காரியாலயம் கொழும்பு – சௌமியபவனிலும் விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றிருந்தன.

இந்தப் பூஜை வழிபாட்டில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், கட்சியின் தலைவர் செந்தில் தொண்டமான், கட்சியின் தவிசாளரும் நிதிச் செயலாளருமான மருதப்பாண்டி ராமேஸ்வரன், அமரர் ஆறுமுகன் தொண்டமான் ஐயாவின் பாரியார் ராஜலஷ்சுமி தொண்டமான் உட்பட இ.தொ.கா. உயர்பீட உறுப்பினர்கள், புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், மாவட்டத் தலைவர், தலைவிமார்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.









# மோட்டார் சைக்கிளில் சாகசம் காட்டிய இளைஞனுக்கு ரூ.55 ஆயிரம் அபராதம்

பொது வீதி ஒன்றில், மோட்டார் சைக்கிள் முன்னால் உள்ள சில்லை உயர்த்தி, ஒற்றைச் சில்லில் உந்துருளியை ஓட்டி சாசகம் காட்டிய இளைஞனுக்கு 55 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

குருநாகல், குளியாப்பிட்டி நீதிமன்றம் இந்தத் தண்டனையை விதித்துடன், கடுமையான எச்சரிக்கையையும் விடுத்துள்ளது.

பொது மக்களுக்கு இடையூறு விளைவித்தமை, காலாவதியான ஓட்டுநர் உரிமத்தை வைத்திருந்தமை, இலக்கத் தகடுகள் மற்றும் பக்கவாட்டு கண்ணாடிகள் சரியாக பொருத்தப்படாமை, பொது மக்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்க முயன்றமை உள்ளிட்ட ஐந்து பிரிவுகளின் கீழ் பொலிஸார், குறித்த இளைஞனுக்கு எதிராக வழக்கை தாக்கல் செய்திருந்தனர்.

நீதிமன்ற விசாரணையின்போது சந்தேக நபர் குற்றச்சாட்டுகளை ஒப்புக் கொண்டுள்ளார்.

இதேபோன்ற குற்றங்களைச் செய்யும், ஏனைய இளைஞர்களுக்கு ஒரு செய்தியாக இருக்கும் வகையில் தண்டனையை விதிக்குமாறு, பொலிஸ் தரப்பு நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்தது. இந்த நிலையில் இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பொருளாதார மீட்சிக்கு வழி!

நாட்டில் தனிநபர்களின் வாழ்க்கைச் செலவு 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இரு மடங்காக அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

ஆயினும், 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2024 ஆம் ஆண்டில் வாழ்க்கைச் செலவு மிகக் குறைந்த அளவிலேயே அதிகரித்துள்ளதாக மத்திய வங்கியின் உதவி ஆளுநர் கலாநிதி சந்திரநாத் அமரசேகர கூறியுள்ளார்.

எனினும், இந்த நிலைமை மக்களுக்கு ஆறுதல் தரக் கூடிய விடயம் அல்ல. எகிறி வரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியாமல் நாட்டு மக்கள் அல்லாடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது தான் கள நிலைவரம்.

முந்தைய ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது பணவீக்கம் குறைவதால் மக்கள் தற்போது பயனடைந்து வந்தாலும், 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகமாக உள்ளது என்றும், இலங்கை மத்திய வங்கியில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் வைத்து உதவி ஆளுநர் கலாநிதி சந்திரநாத் அமரசேகர குறிப்பிட்டுள்ளார்.

“தனிப்பட்ட வருமானத்தைப் பார்த்தாலும், அதிகரித்த விலை நிலைகள் மற்றும் அதிகரித்த வாழ்க்கைச் செலவு காரணமாக நாம் ஒரு கடினமான சூழ்நிலையில் இருப்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாக, 2021 ஆண்டுடன் 2024 ஆம் ஆண்டை ஒப்பிட்டால், வாழ்க்கைச் செலவு இரட்டிப்பாகியுள்ளது.” - என்று தெளிவுபடுத்தியிருக்கின்றார் மத்திய வங்கியின் உதவி ஆளுநர்.

அரசு ஊழியர்களாக இருந்தாலும், தனியார் ஊழியர்களாக இருந்தாலும், அல்லது வணிகங்களின் வருமானமாக இருந்தாலும், அந்த வருமானத்தை அதிகரிக்க அதேபோன்று பொருளாதார வளர்ச்சியும் இருக்க வேண்டும், எதிர்காலத்தில் அந்த வகையான பொருளாதாரம் இருக்கும் என்று நாங்கள் நினைக்கிறோம் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

ஆனால், அது சாத்தியமா என்பது தான் நம் முன் உள்ள பிரதான கேள்வி.

வாழ்க்கைச் செலவு உயர்வைச் சமாளிக்க, தனி நபர் செலவுகளைச் சமாளிக்க சம்பள உயர்வுகளை வழங்குவதும் அறிவிப்பதும் தீர்வாகி விடாது.

‘‘பொதுமக்களுக்கு அவர்கள் இழந்த உண்மையான வருமானம் படிப்படியாக மீட்டெடுக்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். சில நேரங்களில், குறிப்பாக அரச சேவையில், அவ்வப்போது சம்பள உயர்வுகளைக் காண்கிறோம். ஆனால் அவை உற்பத்தித்திறனை அடிப்படையாகக் கொண்ட சம்பள உயர்வுகள் அல்ல. எனவே, பொருளாதார வல்லுநர்களாகிய நாம் பார்ப்பது சம்பளம் அதிகரிக்கும் போது, அவை உற்பத்தித்திறனுடன் இணைக்கப்பட வேண்டும் என்பதுதான்.’’ - என்று விளக்கியிருக்கின்றார் கலாநிதி சந்திரநாத் அமரசேகர.

உண்மைதான். உற்பத்தி உயர்வின் மூலமான பொருளாதார மேம்பாடும், அந்தப் பொருளாதார மேம்பாட்டில் கட்டியெழுப்பப்படும் தனிநபர் வருமான உயர்ச்சியுமே நாட்டை மீட்கும் - நாட்டு மக்களை சுபீட்சத்துக்கு இட்டுச் செல்லும்.

மாறாக, உற்பத்தித் தகைமையையும் பொருளாதார விருத்தியையும் மேம்படுத்தாமல் வழங்கப்படும் சம்பள அதிகரிப்புகள். உற்பத்தித் திறனையும், பொருளாதார வளர்ச்சியையும் பெரும் பின்னடைவு நிலைக்குள்தான் ஆழ்த்தும்.



# சிவஞானச் சித்தராய் வாழ்ந்தவரே யோகர்...!

[இன்று சுவாமிகளின் பிறந்த தினம். அதனை முன்னிட்டு இந்தக் கவிதை பிரசுரமாகிறது]

ஈழத் திருநாட்டில் இணையில்லாச் சித்தராய்
நீள நினைந்து வாழ்ந்திட்டார் யோகர்
ஆழமாய் ஆன்மீகம் அவருள் இருந்தது
அனைவர்க்கும் ஆறுதலாய் அருளியே அவரிருந்தார்

சாதாரண குடும்பத்தில் சாதாரணமாய் பிறந்தார்
சகுனங்கள் எதுவுமே தோன்றியதாய் தெரியவில்லை
எல்லோரும் போலவே இயல்பாகவே இருந்தார்
இறைவனின் அருளாலே ஞானியாய் எழுந்தார்

மாவிட்ட  புரத்தில் பிறந்திட்ட ஒருவரே
மா ஞானியாய் மலர்ந்திட்டார் ஈழத்தில்
பின் புலமுமில்ல முன்புலமும் இல்லை
எல்லாமே இறையருளே என்றெண்ண வைக்கிறது

ஆங்கிலம் படித்தார் அரச பணிசெய்தார்
ஆனாலும் அவரகத்தில் எதுவுமே ஒட்டவில்லை
திருமுறைகள் ஓதினார் திசமாறியே நின்றார்
அனுதினமும் வெறுமையை அவருணர்ந்தார்
அப்போது

பட்டது போதுமென்றார் விட்டாரே தொழிலை
பரதேசிக் கோலத்தில் யாழ்நகரில் நின்றார்
நல்லூரான் தேரடியில் நற்குருவைக் கண்டார்
தன்னையே மறந்தார் சரணடைந்தார் குருவடியில்

சோதனைகள் வேதனைகள் குருகொடுத்து நின்றார்
பொறுமையுடன் அத்தனையும் அவரேற்று நின்றார்
ஞானத்தைப் பெற்றார் ஞாலத்தை மறந்தார்
யோகரெனும் சித்தராய் ஒளிவிட்டு நின்றார்

படித்தவரும் சென்றார் பாமரரும் சென்றார்
ஓலைக் குடிசையில் ஞானியாய் அமர்ந்தார்
கேட்டதைக் கொடுத்தார் கொடுத்ததைப் பெற்றார்
நாடுவார் யாவருக்கும் நல்லதையே உரைத்தார்

நல்வழி காட்டினார் நல்லுரைகள் வழங்கினார்
உபதேசம் அத்தனையும் உயிர்ப்பாக எழுந்தன
வசதியை நாடவில்லை மனமுழுக்கத் துறவே
வந்தவர்க்கு கேட்டவற்றை மனமகிழக் கொடுத்தார்

மதங்கடந்த ஞானியாய் இனங்கடந்த துறவியாய்
எல்லோர்க்கும் பொதுவாய் இருந்திட்டார் யோகர்
சிவதொண்டன் நிலையம் அவரது நினைவாய்
பவவினைகள் போக்கப் புகலிடமாய் இருக்கு

சிவஞானச் சித்தராய் வாழ்ந்தவரே யோகர்
தவமுடைய சீலராய் இருந்தவரே யோகர்
யாழ்மண்ணின் சொத்தாக இருப்பவரே யோகர்
நாமவரை என்றுமே போற்றியே நிற்போம்

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,**
**மெல்ர்ன், ஆஸ்திரேலியா.**







# கிழக்கு மாகாண ஆசிரியைகளது பிரச்சினை தொடர்பில் நடவடிக்கை!

## எடுக்கக் கோருகிறார் அஷ்ரப் தாஹிர் எம்.பி.

(பாறுக் ஷிஹான்)

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த தூரப் பிரதேசங்களுக்கு புதிதாக நியமனம் பெற்ற ஆங்கில ஆசிரியைகளின் அசௌகரியங்களை கருத்தில் கொண்டு பொருத்தமான இடமாற்றத்தை வழங்க வேண்டும் என்று கிழக்கு ஆளுநரிடம் நேரடியாக வலியுறுத்தினார் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர்.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை (27) அம்பாறை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றபோதே இவ்வாறு கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

தூரப் பிரதேசங்களுக்கு நியமனம் பெற்ற ஆசிரியைகள் எதிர்கொள்ளும் மொழி மற்றும் பயண அசௌகரியங்களைக் கிழக்கு மாகாண ஆளுநருக்கு விரிவாக இதன்போது எடுத்துரைத்திருந்தார்.

இதற்கு பதில் வழங்கிய ஆளுநர், இது சம்பந்தமாக உடனடி நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதியளித்துள்ளார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான நிசாம் காரியப்பர், எம்.எஸ்.உதுமாலெப்பை, மஞ்சுல சுகத் ரத்நாயக, பிரியந்த விஜயரத்ன, ஏ.எம்.எம்.ரத்வத்த, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எம்.மனாஸிர், பிரதேச செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், கிழக்கு மாகாண சபையின் உயர் அதிகாரிகள் மற்றும் பொலிஸ் மற்றும் முப்படைகளின் பிரதானிகளும் கலந்து கொண்டனர்.இங்கு பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.



# 'நீர்த்த கடல்' ஆவணப்படம் வெளியீடு!

எழுநாவால் தயாரித்து வெளியிடப்பட்ட 'நீர்த்த கடல்' என்ற தலைப்பிலான ஆவணப்படமானது, தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஒழுங்கமைப்பில் பூநகரி, ஜெயபுரம் சமாசத்தில் திரையிடப்பட்டது.

இந்நிகழ்வில் பங்குபற்றிய நிரஞ்சன் பரிளா கருத்துத் தெரிவிக்கையில்,

குறிப்பாக மீன்பிடி சிறுதொழிலாளர்கள் கடலட்டைப் பண்ணைகளால் பெரிதும் பாதிக்கப்படுகின்றார்கள். எமது பூநகரியில் கடலட்டைப் பண்ணைகள் அமைப்பதற்கு எதிராகப் போராட்டங்கள் பல முன்னெடுத்திருந்தோம். நானும் அதில் கலந்துகொண்டிருந்தேன். இதுவரையிலும் எமக்கான நிரந்தரத் தீர்வு கிட்டவில்லை. இந்த ஆவணத் திரைப்படம் எமது பிரச்சினைகளை வெளிப்படுத்தியிருக்கின்றது.- என்றார்.

வடக்கு - கிழக்குத் தமிழர் தேசக் கடற்பரப்பில் கடல் விவசாயம் எனும் போர்வையில் அமைக்கப்படும் கடலட்டை வளர்ப்புப் பண்ணைகள் மூலம் கடலைச் சார்ந்த தமிழ் மக்களின் இறைமையும், நிலைத்த பொருண்மிய வளங்களும் எவ்வாறு சவாலுக்கு உட்படுத்தப்படுகின்றன? சூழற் சமநிலையும், கடலோரப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்வும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன? என்பவை பற்றி குறித்த ஆவணப்படமானது ஆராய்கின்றமை குறிப்பிடத்தக்கது.





# உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சுற்றுலாத் துறையை மேம்படுத்த திட்டம்

(ஹஸ்பர் ஏ.எச்.)

உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி செயலகத்தின் இணைந்த 'கிளீன் ஸ்ரீலங்கா' செயலகம், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் கடலோரப் பகுதியான நிலாவெளி புறாமலை தீவு மற்றும் திருகோணமலை கடற்கரைக்கு அருகிலுள்ள கடற்பரப்பை சுத்தம் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.



கலந்துரையாடலானது திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன பங்கேற்புடன் இடம்பெற்றது.

உலக சுற்றுச் சூழல் தின தேசிய கொண்டாட்டத்துடன் இணைந்து தேசிய சுற்றுச்சூழல் வாரம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்த சுற்றுச்சூழல் வாரம் மே மாதம் 30 முதல் ஜூன் மாதம் 05 வரை நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் திட்டம் 2025 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தின கொண்டாட்டத்தை “பிளாஸ்டிக் மாசுபாட்டை முடிவுக்குக் கொண்டுவருதல்” என்ற உலகளாவிய கருப்பொருளின் கீழ் ஏற்பாடு செய்துள்ளது.

பிளாஸ்டிக் மாசுபாட்டின் உலகளாவிய பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைக் காணும் இறுதி இலக்காக பிளாஸ்டிக் மாசுபாட்டை எதிர்த்துப் போராடுவதற்கான நடவடிக்கைகளைப் பெறுவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

இதன்போது மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.சுதாகரன், 'கிளீன் ஸ்ரீலங்கா' செயலகத்தின் அதிகாரிகள், அரச உயரதிகாரிகள், துறை சார்ந்த அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.







# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அம்பாறையில் ஆர்ப்பாட்டம்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரால் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நேற்று மேற்கொள்ளப்பட்டது.

நேற்று செவ்வாய்க்கிழமை (26) அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பகுதியில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இந்த அமைதி வழிப் போராட்டமானது இலங்கை அரசிடம் நீதி கோரிய போதும் தீர்வுகள் கிடைக்காத நிலையில் தற்போது சர்வதேசத்திடம் நீதி கோரும் வகையில் முன்னெடுத்து வருகின்றனர்.

அம்பாறை மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்க தலைவி தம்பிராசா செல்வராணி தலைமையில் இடம்பெற்ற இந்தக் கவனவீர்ப்பு போராட்டத்தில் சிவில் சமூக செயற்பாட்டாளரும் அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்க ஆலோசகருமான தாமோதரம் பிரதீபன், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எம் உறவுகள் எங்கே? மனிதம் பாதுகாக்கப்படுகிறதா? அரசே காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகள் எங்கே? காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நிரந்தர தீர்வை பெற்று தருவீர்களா? ஆகிய பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது கவனயீர்ப்பில் ஈடுபட்டவர்கள் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் புகைப்படங்களை ஏந்தியவாறும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதற்கு சர்வ தேச விசாரணையை வலியுறுத்தி இந்த பேரணி இடம்பெற்றது.

# வெளிநாட்டு வேலைவாய்ப்புத் தொழிற்சந்தை!

(அபு அலா )

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட வெளிநாட்டு தொழிற் சந்தை நிகழ்ச்சித் திட்டமென்று அம்பாறையில் நாடத்தத் திட்டமிட்டுள்ளது என்று அதன் முகாமையாளர் மதுஷான் குலரத்ன தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில், வெளிநாட்டு வேலை வாய்ப்பு தேடுபவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த வெளிநாட்டு தொழிற் சந்தை நிகழ்வு நாளை (30) வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அம்பாறை திறந்த பல்கலைக்கழக வளாகத்தில் இடம்பெறவுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார்.





# முள்ளிக்குளம் கிராமத்துக்கு விஜயம் செய்த ரவிகரன் எம்.பி.

## காணிவிடுவிப்பு, மீள்குடியேற்றம் தொடர்பில் ஆராய்வு

**(விஜயரத்தினம் சரவணன்)**

மன்னார் – சிலாவத்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முள்ளிக்குளம் கிராம மக்களை சந்தித்துக் கலந்துரையாடிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், முள்ளிக்குளம் கிராமத்தின் மீள்குடியேற்றம், காணிவிடுவிப்பு உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்துள்ளார்.

அத்தோடு முள்ளிக்குளம் கிராமத்துக்கு நேரடியாகச் சென்று முள்ளிக்குளம் பாடசாலை மற்றும் தேவாலயம் என்பவற்றையும் பார்வையிட்டு பொது மக்கள், ஆசிரியர்களிடம் நிலமைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

முள்ளிக்குளம் கிராம மக்கள் கடந்த கால அசாதாரண சூழ்நிலைமைகள் காரணமாக 1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடப்பெயர்வைச் சந்தித்து மீண்டும் 2002 ஆம் ஆண்டு மீளக் குடியேறியுள்ளனர். அதன் பின்னர் 2007ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இடம்பெயர்வைச் சந்தித்துள்ளனர்.

இவ்வாறு இடப்பெயர்வைச் சந்தித்த முள்ளிக்குளம் மக்கள் இதுவரையில் அவர்களது சொந்த இடத்தில் மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை.

தமிழர்களது பூர்வீக முள்ளிக்குளம் கிராமத்தை வனவளத் திணைக்களத்தினரும், கடற்படையினரும் முற்றாக அபகரித்துள்ளனர்.

இந்த நிலையில் முள்ளிக்குளம் கிராமத்தில் பூர்வீகமாக வாழ்த்துவந்த தமிழ் மக்கள் மலைக்காடு மற்றும் காயாக்குழி ஆகிய கிராமங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இத்தகைய சூழலில் கடற்படையினர் மற்றும், வனவளத் திணைக்களத்தினர் அபகரித்துவைத்திருக்கின்ற தமது பூர்வீக கிராமத்தை விடுவிப்புச்செய்வதுடன், தமது பூர்வீக முள்ளிக்குளம் கிராமத்தில் தம்மை மீள்குடியமர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு இதன்போது முள்ளிக்குளம் கிராம மக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மீள்குடியமர்த்தப்பட வேண்டிய முள்ளிக்குளம் கிராமத்துக்கு நேரடியாகச் சென்று நிலமைகளைப் பார்வையிட்டார். அங்கு இயங்கிவரும் முள்ளிக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மற்றும், முள்ளிக்குளம் பரலோக மாதா தேவாலயத்துக்கும் சென்று நிலமைகளைப் பார்வையிட்டார். எதிர்நோக்கும் சிக்கல் நிலைமைகள், இடர்பாடுகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

குறிப்பாக முள்ளிக்குளம் கிராமம் மீள்குடியமர்த்தப்படாத நிலையிலும், முள்ளிக்குளம் அ.த.க. பாடசாலை முள்ளிக்குளம் கிராமத்திலேயே இயங்கி வருகின்றது. இந்த நிலையில் மலைக்காடு பகுதியில் இருந்து நீண்ட தூரத்தில் இருக்கும் முள்ளிக்குளம் பாடசாலைக்கு மாணவர்களும், ஆசிரியர்களும் பலத்த இடர்பாடுக்கு மத்தியிலேயே சென்று வருகின்றனர். குறிப்பாக போக்குவரத்து இடர்பாட்டை எதிர்கொள்கின்றனர். இதன்போது பாடசாலை சமூகத்தினரால் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நிலமைகளை ஆராய்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், காணிவிடுவிப்பு மற்றும், மீள்குடியேற்றம் தொடர்பில் உரிய தரப்பினரின் கவனத்துக்குக் கொண்டு வருவதுடன், உரிய நடவடிக்கை நடவடிக்கை மேற்கொள்வதற்கு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படும் எனத் தெரிவித்தார். அத்தோடு முள்ளிக்குளம் பாடசாலை மாணவர்கள் மற்றும், ஆசிரியர்கள் எதிர்நோக்கும் போகுவரத்து இடர்பாடுகளைத் தீர்ப்பது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்துள்ளார்.



# சிறுவர் பூங்கா கையளிப்பு!

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் பேசாலை புனித வெற்றி அன்னை ஆலய பங்கின் கீழ் இயங்கும் மூன்று முன்பள்ளி பாடசாலைகளில் ஒன்றான புனித மரியாள் முன்பள்ளி சிறுவர் பூங்கா, பேசாலையைச் சேர்ந்த வரும் ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் யூ.கே. மன்னார் நலன்புரி அமைப்பின் பொருளாளருமான தேவசகாயம் கில்மனின் நன்கொடை நிதியத்தில் புனரமைக்கப்பட்டு சிறுவர்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இப்பாடசாலை நிர்வாகத் தலைவர் ஜ.ஜெறைன் கூஞ்ஞ தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பேசாலை பங்குத் தந்தை அருட்பணி சத்தியராஜ் அடிகளார் மற்றும் இதன் நன்கொடையாளர் தேவசகாயம் கில்மன் ஆகியோர் திறந்து வைத்தனர்.







# கொட்டகல முன்பள்ளி ஆசிரியருக்கு வாண்மை விருத்திக் கலந்துரையாடல்

(த.சுபேசன்)

கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் இலங்கை மற்றும் லண்டன் கிளையினரின் ஏற்பாட்டில் கொட்டகல, விஸ்ணுபுரத்தில்முன்பள்ளிஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திக் கலந்துரையாடலும் “21 ஆம் நூற்றாண்டு முன்பள்ளிச் செல்நெறிகள்” எனும் நூல் வெளியீட்டு வைபவமும் இடம்பெற்றன.

கல்வி அபிவிருத்திக் குழுமம் மற்றும் பெருந்தோட்ட கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனம் ஆகியன இணைந்து கொட்டகல பிரீடோ முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் இந்த நிகழ்வை ஒழுங்கமைத்திருந்தது.


பிரீடோ முன்பள்ளி ஆசிரியர் பயிற்சிக்கான விரிவுரையாளர் செல்வி அ.சண்முகவடிவு தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் காப்பாளர் நடராசா சச்சிதானந்தன், ஸ்ரீபாத தேசிய கல்வியற்கல்லூரி விரிவுரையாளர் எம்.அகிலன், ஹட்டன்வலயக்கல்விப்பணிமனையின் உதவிக் கல்விப் பணிப்பாளர் நாகராஜ்





ஆகியோர் கலந்து கொண்டு விசேட உரையை நிகழ்த்தியிருந்தனர்.

நிகழ்வில் விசேட அம்சமாகக் கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் காப்பாளர் ந.சச்சிதானந்தன் “21ஆம் நூற்றாண்டு முன்பள்ளி செல்நெறிகள்”என்ற நூலை வெளியிட்டு வைத்தார்.


EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA





# தேசிய வீடமைப்பு அதிகார சபையால் தெரிவான பயனாளிகளுக்கு வீடமைப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

தேசிய வீடமைப்பு அதிகார சபையால் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசம் உட்பட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு "உங்களுக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம்" எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பயனாளிகள் புதிய வீடுகளை அமைத்துக் கொள்வதற்காக அடிக்கல் நடப்பட்டுள்ளது.

நிந்தவூர், காரைதீவு, நீலாவணை, நாவிதன்வெளி மற்றும் சம்மாந்துறை பிரதேசங்களின் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் வீடுகளுக்கு ஆரம்பக் கட்டமான அடிக்கல் நடும் நிகழ்வு அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவால் நேற்று (28) புதன்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஐராங்கனி, தேசிய வீடமைப்பு அதிகார சபையின் பொறியிலாளர்கள் மற்றும் அதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர், பிரதி அமைச்சின் இணைப்பாளர் மற்றும் தேசிய மக்கள் சக்தியின் அமைப்பாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.




# உணவக ஊழியர்களுக்கு நோய்த் தடுப்பூசி ஏற்றல்!

(நூருல் ஹுதா உமர் )

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட உணவு கையாளும் நிறுவனங்களில் பணிபுரியும் நபர்களுக்கு தைபொய்ட் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் திருமதி சகிலா இஸ்ஸடீனின் ஆலோசனைக்கு அமைய சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் தலைமையில் நடைபெற்ற இந்தச் செயற்பாட்டில் 37 நபர்கள் தடுப்பூசி ஏற்றிக் கொண்டனர்.

தைபொய்ட் என்பது ஒரு வகை பக்டீரியாவால் பரவும் ஒரு தீவிரமான தொற்று நோயாகும். இது மாசுபட்ட உணவு மற்றும் குடிநீரால் பரவுவதுடன் இத் தொற்றால் உலகலாவிய ரீதியில் கோடிக்கணக்கானோர் பாதிக்கப்படுகின்றனர்.

இந்த நோயின் அறிகுறிகளாக நீண்ட நாள்களாக காய்ச்சல், வயிற்று வலி, ஈரல் மற்றும் முதுகு வலி, வாந்தி மனச் சோர்வு, குடல் சீர்கேடுகள் என்பன ஏற்படும்.

எனவே இதிலிருந்து பாதுகாப்புப் பெற்றுக் கொள்ளும் ஒரே வழியாக, அனைத்து உணவு கையாளும் நிறுவனங்களிலும் பணிபுரியும் நபர்களும் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகிறது என்று சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்தார்.



# ஜே.வி.பியாலும் நீக்க முடியாத பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்!

## இனவாத வரலாற்றின் தொடர்ச்சியா?

**- நவீனன்**

(இனவாதம் மீண்டும் தலைதூக்கினால், நாட்டின் அனைத்து சமூகத்தையும் பாதிக்கும் என இந்த அரசும் தெரிந்து கொண்டு, தொடர்ந்தும் தமிழர் மீதான விரோத மனநிலையை உருவாக்கி வருகிறது.)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராக, அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட தருணத்தில் இருந்து தொடர்ச்சியாக எதிர்த்து வந்த கட்சி ஜே.வி.பிதான், அதன் வழியே தேசிய மக்கள் சக்தியும் எதிர்த்து வந்தது.

ஆனால், அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் அதனை நீக்குவதாக உறுதி அளித்தார்கள். இன்னமும் இந்த சட்டம் நடைமுறையில் உள்ளது என்பதே உண்மையாகும். எதிர்காலத்தில் இந்த சட்டத்தை மீண்டும் கடுமையாக அமுல்படுத்துவார்களா என்பதும் எவருமே எதிர்பார்க்க முடியாததாகும்.

ஏனெனில் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு ஒன்றைக் கூறுவார்கள். வந்த பின்னர் வாக்களித்த மக்களின் நலன்களை புறக்கணித்து வாக்குறுதிகளை காற்றில் பறக்க விடுவர். ஆதலால் ஆட்சிக்கு வந்த இந்த அரசும் இந்தப் பயங்கரவாதச் சட்டத்தை இன்னும் நீக்கவில்லை.

### ராஜபக்ஷ அரச பயங்கரவாதம்

ராஜபக்ஷ ஆட்சியில் அரச பயங்கரவாதத்தைத் தீவிரப்படுத்திய காலத்தில், அப்போதைய எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஷ ராஜபக்ஷ என்ற பெயரைச் சொல்லக் கூட பயந்து நடுங்கி வந்தார்.

இதேவேளை தேசிய மக்கள் சக்தி, தாம் ஆட்சிக்கு வந்ததும் இந்தச் சட்டத்தை இரத்துச் செய்வதாக வாக்குறுதி அளித்தனர். ஆனால் இந்தச் சட்டம் இன்னும் நடைமுறையில் உள்ளது.

ராஜபக்ஷக்கள் தங்கள் அரசியலின் மிகக் கொடூரமான, இழிவான, இரக்கமற்ற, பாவகரமான செயல்களை இந்தச் சட்டத்தின் பின்புறமாக நடத்தி வந்தனர்.

மனித உரிமை மீறல்கள் மிக மோசமான நிலையில் இருந்த காலத்தில், ராஜபக்ஷக்களின் நிழலில் வளர்ந்த இக்கட்சியே தற்போது ஆட்சியில் உள்ளது.

இவர்களின் ஆட்சியில் கூட தொடர்ந்து இனவாதம் என்பது தெளிவாகத் தெரிகிறது. அதன் ஒரு பகுதியாகவே இந்தச் சட்டம் இதுவரை அகற்றப்படவில்லை.

தேர்தலுக்கு முன்பாக அவர்களின் அரசியல் வாக்குறுதிகள் காற்றில் பறந்து விட்டன. மிகப்பெரிய கவலையை ஏற்படுத்தும் விடயம், பயங்கரவாத தடை சட்டம் இன்னமும் இரத்து செய்யப்படாதது தான்.

இந்த விவகாரத்தில் உறுதியாக சட்டத்தை இரத்து செய்ய வேண்டும் என்பதில் எந்த பேரினவாத கட்சியும் உறுதியாக முடிவு எடுப்பது இல்லை. ஆனால் முன்னைய காலத்தில் அந்தச் சட்டத்தை மேலும் கடுமையாக்க



செய்யப்படும் வேலையை இந்தக் கட்சிகள் செயற்படுத்தி வந்தன.

நீண்ட காலமாக இலங்கையின் பொருளாதாரம் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளது. முக்கியமான சிங்கள கட்சிகள் இன்னமும் இனவாத அரசியல் செய்யும் அதே நேரத்தில், நாட்டின் எதிர்க்கட்சிகளின் ஒரே தந்திரம் இனவாதம் என்பதால், இனங்களுக்கிடையில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தைப் பற்றி அரசுக்கு மிகப் பெரிய பொறுப்பு உள்ளது.

முன்பு ராஜபக்ஷக்கள் இனவாத அரசியலை சுதந்திரமாகச் செய்ய ஒரு களத்தை உருவாக்க இந்த வங்குரோத்து அரசியல்வாதிகள் போலியான வாக்குறுதிகளை வழங்கி மக்களை திசை திருப்பி வந்தனர்.

இனவாதம் மீண்டும் தலைதூக்கினால், நாட்டின் அனைத்து சமூகத்தையும் பாதிக்கும் என அனைத்துக் கட்சிகளும் அறியும். குறிப்பாக ஈஸ்டர் தாக்குதலுக்குப் பிறகு நாட்டிலும் இந்த இனவாத நிலை உருவாகியது.

ஆயினும் நடந்து முடிந்த தேர்தலில் நாட்டின் அனைத்து இனங்களின் நம்பிக்கையுடன் புதிய ஆட்சிக்கு வழி வகுத்தனர். ஆனால் ஆளும் கட்சியியும் இந்தச் சட்டத்தை விரைவில் முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருகிறது என்று நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளது. ஆனாலும் வெறும் அறிக்கை மூலம் தெரிவிக்காமல் இந்தச் சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பதே முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

### 1983 ஜே.வி.பியின் திட்டமிட்ட இனவாதம்

1983இல் ஸ்ரீலங்காவின் தலைநகரில் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்த தமிழரின் பாரிய தொழில் நிறுவனங்களான மகாராஜா நிறுவனம், சென்ற் அந்தனீஸ் நிறுவனம் போன்ற நூற்றுக் கணக்கான நிறுவனங்கள் இனங்காணப்பட்டுத் தேடித்தேடி எரிக்கப்பட்டன. இதன் பின்னணியில் அப்போதைய ஆளும் கட்சி மாத்திரமின்றி, ஜே.வி.பியும் முக்கிய பங்காற்றியது என்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன.

இனவெறி கொண்ட சிங்களக் காடையர்கள் கொள்ளையிலும் கொலையிலும் ஈடுபட, ஜே.வி.பியும்

தொடர்ச்சி▼




# ஜே.வி.பியாலும் நீக்க முடியாத பயங்கரவாதத் தடுப்புச் சட்டம்!

தொடர்ச்சி▲

திட்டமிட்டுத் தமிழரின் தலைநகர்ப் பொருளாதாரத்தைச் சீர்குலைத்துத் தமிழரைத் துரத்தத் தலைப்பட்டது.

1981 இல் யூ.என்.பி. அரசு தமிழரின் அறிவைச் சீர்குலைக்க நூலகத்தை எரித்து தலையில் கையை வைத்தது எனலாம். ஆனால் ஜே.வி.பியோ பொருளாதாரத்தை முடக்கித் தமிழரின் மடியில் கையை வைத்தது என்றே கூறலாம்.

### சமாதானத்தின் உண்மையான எதிரிகள் யார்?

2004 சமாதான பேச்சு வார்த்தை நடந்த காலகட்டத்தில் இலங்கையில் இனவாத பதற்ற நிலைமைகளை உக்கிரப்படுத்துவதன் ஒரு பாகமாக, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) பல்வேறு இனவாத பேரணிகளை நடத்தியது என்பது நினைவிருக்கலாம். சமாதானத்தின் உண்மையான எதிரிகள் யார்? என்ற தலைப்பில் இலங்கை தீவு முழுவதும் ஒரு தொடர் விரிவுரைகளை நடத்தி வந்தது.

ஜே.வி.பி. சமாதானத்துக்குச் சார்பாகப் பேசியதாகக் கூறிக் கொண்ட போதிலும் இந்த விரிவுரைகளின் முழு இலக்கும் நாட்டை மீண்டும் யுத்தத்துக்குள் தள்ளுவதாகும்.

2004 ஏப்ரல் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரது சிறுபான்மை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசும் இடைநிறுத்தப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதான பேச்சுகளை மீண்டும் தொடங்க தற்காலிகமாக முயற்சித்தனர்.

ஆயினும், அக்காலத்தில் சுதந்திர முன்னணியின் பிரதான பங்காளியான ஜே.வி.பி., பேச்சு வார்த்தைகளை எதிர்த்து பிரச்சாரத்தில் ஈடுபட்டது. இந்தப் பேச்சு வார்த்தைகள், இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான தனது பிரேரணையின் அடிப்படையில் இடம்பெற்றது.

இலங்கை இராணுவத்தின் வீரம் செறிந்த இராணுவ பிரச்சாரத்தை பற்றி பரிந்து பேசுவதன் மூலம், 2002 யுத்த நிறுத்த உடன்படிக்கையை ஆரம்பத்திலேயே எதிர்த்த இராணுவத் தலைவர்களின் பிரிவுகளுடன் நேரடியாக ஜே.வி.பி. அணிதிரண்டது.

### அநுரவின் இனவாத வரலாறு!

அநுர 1995 ஆம் ஆண்டிலிருந்து அரசியலில் இருந்து வருகிறார். அத்துடன் 2000 ஆம் ஆண்டு முதல் நாடாளுமன்றில் உறுப்பினராக இருக்கிறார்.

2002 இல் ரணில் கொண்டு வந்த சமாதானத்தைச் சிதைத்ததில் அநுர முக்கிய பங்கு வகித்தார் என்ற குற்றச்சாட்டும் பரவலாக உள்ளது.

மகிந்தவை யுத்தத்துக்குள் தள்ளியது அநுர என்றும் பரவலான குற்றச்சாட்டும் உள்ளது.

இறுதி யுத்தம் நடைபெற்ற வேளையில், இறுதி நொடியில் ஒரு நிமிடம் கூட யுத்த நிறுத்தம் செய்ய விடாது தடுத்தது ஜே.வி.பியின் அநுர ஆதரவாளர்கள் கூட்டம் என்று பரவலாக நம்பப்படுகிறது.

மேலும் 2005 இல் இலங்கை இராணுவத்துக்கு ஜே.வி.பி. மூலமாகப் படைகளை திரட்டிக் கொடுத்தது என்பதை அநுர குமாரவே பகிரங்கமாக அறிவித்தார். அந்த இராணுவம்தான் தமிழர்மீது இனப்படுகொலை புரிந்தது. தமிழ சகோதரிகளை கற்பழித்து படுகொலை செய்ததும் உலகறிந்ததே.

தமிழரின் பூர்வீக தாயகத்தை பிரிப்பதில் முன்னின்றதும் ஜே.வி.பிதான். இணைந்த வடக்கு, கிழக்கையும் நீதிமன்றம் சென்று பிரித்தது அநுரவின் கட்சியினர்தான்.

1987களில் இந்திய எதிர்ப்பு, தமிழின எதிர்ப்பு என்ற இனவாத ஆயுதத்தை கையில் எடுத்த ஜே.வி.பியைச் சிங்கள மக்கள் பெரும் தேசபக்தர்களாக மதிக்கும் நிலை உருவாகியிருந்தது.

### நிகழ்கால இனவாதம்

இனவாதம் மீண்டும் தலைதூக்கினால், நாட்டின் அனைத்து சமூகத்தையும் பாதிக்கும் என இந்த அரசும் தெரிந்து கொண்டு, தொடர்ந்தும் தமிழர் மீதான விரோத மனநிலையை உருவாக்கி வருகிறது.

திருகோணமலையில் கந்தளாய் தமிழ் ஊர் திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களின் ஊடாக தமிழர்களிடம் இருந்து பறிக்கப்பட்டது.

2004 ஆம் ஆண்டு அநுர நீர்ப்பாசன அமைச்சராக வந்த பின்னர் கந்தளாயில் உள்ள தமிழ் விவசாயிகளுக்குக் கந்தளாய் குளத்தில் இருந்து விவசாயம் செய்ய நீர் போகாமல் தடுத்து நிறுத்தினார்.

அது மட்டும் அல்லாமல் கந்தளாய்க் குளத்தைக் கட்டிய தமிழ் மன்னன் குளக்கோட்டனின் வரலாற்றை இருட்டடிப்புச் செய்து அங்கே சிங்கள மன்னரின் சிலையை அநுர எழுப்பினார்.

அநுர தலைமையிலான ஜே.வி.பி. அல்லது என்.பி.பியின் இலக்கு தமிழரின் மொழி, மதம், கலை, கலாசாரம், பண்பாடு என்பவற்றை அழித்துத் தமிழரை சிங்களவராக மாற்றுவதே ஆகும்.

நீர்கொழும்பில் இருந்த தமிழர்கள் அவ்வாறு சிங்களவராக மாற்றப்பட்டு வாழ்கின்றார்கள். தொடரும் சிங்கள மயமாக்கலில் திருகோணமலையில் குளக்கோட்டனின் சிலையை அகற்றி சிங்கள மன்னனின் சிலையை வைத்துள்ளார்.

வணங்கா மண் வன்னியில் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் ஓட்டு தொழிற்சாலையில் பண்டார வன்னியன் பெயர் மாற்றப்பட்டுள்ளது. உதிரம் வீழ்ந்து உப்பு விளைந்த ஆனையிறவு உப்பு சிங்கள பெயராக மாற்றப்பட்டது. இவ்வாறு தமிழினத்தை சிங்கள மயமாக்கல் செய்வதே அநுரவின் நீண்ட காலத் திட்டமாகும்.

தானைத் தலைவன் பிறந்த வல்வெட்டித்துறையில் அநுர தமிழர் கலாசாரத்தை மறந்து எல்லோரும் இலங்கையராக மாறி கொண்டாட சொல்லியிருந்தார். இவையெல்லாம் இந்த அரசின் அப்பட்டமான இன வழிப்பை மென்மையாகச் செய்வதையே எடுத்துக் காட்டுகின்றன.

# கன்னட மொழி குறித்த கமல்ஹாசனின் கருத்துக்கு கர்நாடகாவில் கடும் எதிர்ப்பு



கன்னட மொழி குறித்த நடிகர் கமல்ஹாசனின் கருத்துக்கு கர்நாடகாவில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது. அவர் மன்னிப்பு கேட்காவிடில் 'தக் லைஃப்' படத்துக்கு தடை விதிக்கப்படும் என அம்மாநில கலாச்சாரத்துறை அமைச்சர் சிவராஜ் தங்கடகி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இயக்குநர் மணி ரத்னம் இயக்கத்தில் நடிகரும் மக்கள் நீதி மய்யத்தின் தலைவருமான கமல்ஹாசன் நடித்துள்ள 'தக் லைஃப்' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா அண்மையில் சென்னையில் நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராக கன்னட நடிகர் சிவராஜ் குமார் பங்கேற்றார்.

இந்த விழாவில் கமல்ஹாசன் பேசுகையில், "கன்னட நடிகர் ராஜ்குமாருடைய குடும்பம் அந்த ஊரில் (கர்நாடகாவில்) இருக்கும் என்னுடைய குடும்பம். தமிழில் இருந்து பிறந்தது தான் கன்னடம். அதனை நீங்களும் (சிவராஜ்குமார்) ஒப்புக் கொள்வீர்கள் என நம்புகிறேன்." என தெரிவித்தார்.

கமல்ஹாசனின் இந்த பேச்சுக்கு கர்நாடகாவில் கன்னட ரக்ஷன வேதிகே, கன்னட சலுவளி உள்ளிட்ட அமைப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. பெங்களூரில் உள்ள வணிக வளாகங்களில் வைக்கப்பட்டிருந்த 'தக் லைஃப்' படத்தின் விளம்பர பதாகைகளை கிழித்து எறிந்தனர். சமூக வலைதளங்களில் இந்த படத்தை புறக்கணிக்க வேண்டும் எனவும், கர்நாடகாவில் திரையிட அனுமதிக்கக் கூடாது எனவும் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

கர்நாடக பா.ஜ.க. தலைவர் விஜயேந்திரா கூறுகையில், "கமல்ஹாசன் ஒன்றும் வரலாற்றாசிரியர் இல்லை. அவர் எந்த மொழியில் இருந்து எந்த மொழி பிறந்தது என கூற முடியாது. அவரது பேச்சின் காரணமாக 6.5 கோடி கன்னடர்களின் மனம் புண்பட்டுள்ளது. இதற்காக அவர் மன்னிப்பு கேட்க வேண்டும்.

தென்னிந்தியாவில் சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தி வருவதாக கூறும் கமல்ஹாசன் கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து இந்து மதத்தை அவமதித்து வருகிறார். தனது படங்கள் வாயிலாக இந்துக்களின் மனதையும் காயப்படுத்தி வருகிறார். இதனை ஒரு போதும் ஏற்க முடியாது. கன்னடர்கள் தங்களின் நிலம், மொழி, மக்கள், நீர் ஆகியவற்றை ஒருபோதும் விட்டுத் தர மாட்டார்கள் என்பதை கமல்ஹாசனுக்கு நினைவூட்டுகிறேன்." என்று கூறியுள்ளார்.

கர்நாடக முதல்வர் சித்தராமையா கூறுகையில், "கமல்ஹாசன் பாவம். அவருக்கு கன்னட மொழி குறித்த வரலாறு தெரியவில்லை" என விமர்சித்துள்ளார்.

இதனிடையே கன்னட கலாச்சாரத் துறை அமைச்சர் சிவராஜ் தங்கடகி, "கன்னட மொழி குறித்த கமல்ஹாசனின் கருத்து தேவையற்றது. கன்னட மக்கள் இதுபோன்ற கருத்துக்களை பொறுத்துக்கொள்ள மாட்டார்கள்.

அவர் இதற்காக மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லையென்றால், கர்நாடகாவில் அவரின் திரைப்படத்துக்கு தடை விதிக்கப்படும். இதுதொடர்பாக கர்நாடக திரைப்பட வர்த்தக சபைக்கு கடிதம் எழுத இருக்கிறேன்." என தெரிவித்தார்.

இது தொடர்பாக நேற்று கமல்ஹாசனிடம் கேரளாவில் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அவர் பதிலளிக்கையில்,

"அரசியல்வாதிகள் மொழி குறித்து கருத்து சொல்வதற்கு தகுதியற்றவர்கள். மொழியியல் அறிஞர்கள், தொல்லியல் ஆய்வாளர்கள், வரலாற்று ஆசிரியர்கள் அதுபற்றி கருத்து சொல்லட்டும்.

தமிழகத்தில் எனக்கு நெருக்கடி வந்தபோது, கன்னடர்கள் தங்களது ஊருக்கு வருமாறு என்னை அழைத்தார்கள். அன்பின் காரணமாகவே நான் அவ்வாறு கூறினேன். அன்பு எப்போதும் மன்னிப்பை எதிர்பார்க்காது." என்றார்.

# நடிகர் ராஜேஷ் காலமானார்



தமிழ்த் திரைப்பட நடிகர் ராஜேஷ் காலமானார். அவருக்கு வயது 75. குறைந்த ரத்த அழுத்தத்தின் காரணமாக ஏற்பட்ட உடல்நிலை பாதிப்பினால் அவர் உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இயக்குநர் கே.பாலச்சந்தரின், 'அவள் ஒரு தொடர்கதை' படத்தின் மூலம் திரையுலகில் அறிமுகமானார் நடிகர் ராஜேஷ். தமிழ், தெலுங்கு, மலையாளம் உள்பட பல்வேறு மொழிகளில் 150 இற்கும் மேற்பட்ட திரைப்படங்களில் அவர் நடித்துள்ளார்.

"கன்னிப் பருவத்திலே" படத்தின் நாயகனாக அறிமுகமானவர் ராஜேஷ். அதற்குப் பிறகு பல்வேறு படங்களில் நடித்தார். வெள்ளித்திரை நடிகர், டப்பிங் கலைஞர், எழுத்தாளர், சின்னத்திரை நடிகர் என அனைத்திலுமே தனது முத்திரையைப் பதித்தவர் ராஜேஷ்.

நடிகர் ராஜேஷ் பன்முகத்தன்மை கொண்ட நடிகராக அறியப்படுகிறார். 'அந்த ஏழு நாட்கள்', 'பயணங்கள் முடிவதில்லை', 'சத்யா', 'விருமாண்டி', 'மகாநதி' உள்ளிட்ட பல்வேறு படங்களிலும் அவர் குணச்சித்திர நடிகராக மிளிர்ந்தவர். விஜய் சேதுபதி – கத்ரீனா கைஃப் நடித்த 'மெர்ரி கிறிஸ்துமஸ்' படமே இவர் நடித்த கடைசிப் படமாக உள்ளது.

திரைத்துறையைத் தாண்டி சமூக வலைதளங்களிலும் ஆரோக்கியம் சார்ந்து பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அதிலும் தனக்கென தனி ரசிகர் கூட்டத்தை வைத்திருந்தவராவார். புத்தக வாசிப்பு சார்ந்தும் பேசுவார். ராஜேஷ் ஒரு பன்முகத் திறமையாளர், சிறந்த மனிதர், நல்லொழுக்கம் நிறைந்தவர் என்று அவருக்கு திரையுலகினர் பலரும் புகழஞ்சலி செலுத்தி வருகின்றர்.




# வரிகளை அமுல்படுத்துவதற்கு ட்ரம்பிற்கு அதிகாரம் இல்லை

## அமெரிக்க சர்வதேச வர்த்தக நீதிமன்றம் தீர்ப்பு

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பிற்கு வரிகளை அமுல்படுத்த அதிகாரம் இல்லை என, அமெரிக்க சர்வதேச வர்த்தக நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இலங்கை உள்ளிட்ட நாடுகளுக்குத் தீர்வை வரியை அதிகரித்து ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டிருந்தார்.

எனினும், அவர் எந்த நாட்டுக்கு எதிராகவும் அமுல்படுத்திய அல்லது அமுல்படுத்துவதாக அச்சுறுத்திய தீர்வை வரி அதிகரிப்புகள் செல்லுபடியாகாதென நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ட்ரம்பின் குடியரசுக் கட்சி கட்டுப்பாட்டில் உள்ள காங்கிரஸுக்கு மட்டுமே அந்த அதிகாரம் உள்ளது எனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, ட்ரம்ப் நிர்வாகம் இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேன்முறையீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அமெ. செயல் திறன் துறையிலிருந்து விலகுகின்றார் எலான் மஸ்க்!



அமெரிக்க அரசின் செயல் திறனை ஒழுங்குபடுத்துவதற்காக உருவாக்கப்பட்ட துறையில் இருந்து விலகுகிறார் என எலான் மஸ்க் அறிவித்துள்ளார். இதனை எக்ஸ் தள பதிவு மூலம் அவர் தெரிவித்துள்ளார்.

“சிறப்பு அரசு ஊழியராக எனது பணிக்காலம் முடிவடையும் நிலையில், தேவையற்ற செலவுகளைக் குறைப்பதற்கான பணியை மேற்கொள்ளும் வாய்ப்பை அளித்த ஜனாதிபதி டொனல்ட் ட்ரம்ப்புக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். செயல் திறனை ஒழுங்குபடுத்துவதற்காக உருவாக்கப்பட்ட துறையின் நோக்கம் காலப்போக்கில் வலுப்பெறும்” என எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.

இதை வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவரும் உறுதி செய்துள்ளார்.

ட்ரம்ப்பின் புதிய வரி மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவித்திருந்தார் மஸ்க். ‘ஏமாற்றமடைந்தேன்’ என அதை விமர்சித்திருந்தார். இந்நிலையில், அந்த விமர்சனத்தை வெளிப்படுத்திய மறுநாளே அரசு பொறுப்பில் இருந்து விலகும் முடிவை அறிவித்துள்ளார்.

புதிய வரி மசோதாவின் சில அம்சங்களில் தனக்கு விருப்பம் இல்லை என ஊடகத்துடனான பேட்டியில் மஸ்க் தெரிவித்திருந்தார். இனி ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் டெஸ்லா நிறுவனத்தின் செயல்பாடு சார்ந்து மஸ்க் கவனம் செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் செயல்திறனை ஒழுங்குபடுத்துவதற்காக உருவாக்கப்பட்ட னுழுபுநு துறையில் மஸ்க்கை நியமித்தார் ட்ரம்ப். ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்ப்புக்கு எலான் மஸ்க் உதவியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

செயல்திறன் துறையானது அரசாங்கத்துக்கு வெளியில் இருந்து ஆலோசனை, வழிகாட்டுதலை வழங்கும். அதே போல பெரிய அளவிலான கட்டமைப்பு சீர்திருத்தங்களை முன்னெடுக்க தொழில்முனைவோர் அணுகுமுறையை உருவாக்கும் என்றும், வெள்ளை மாளிகை, மேலாண்மை அலுவலகம் மற்றும் பட்ஜெட் போன்ற விவகாரங்களில் இந்த துறை பங்கு கொள்ளும் என அப்போது தெரிவிக்கப்பட்டது.

பக்கங்கள் - 3

# கனடா முரசு

வியாழக்கிழமை 29/05/2025

## கரடி தாக்கி பெண் காயம்



C2 ▶



# தமிழின இன அழிப்பு நினைவுச்சின்னம் மர்மநபர்களால் சேதப்படுத்தப்பட்டது

கனடாவின் பிரம்டன் நகரில் உள்ள சிங்கௌசி பூங்காவில் உள்ள தமிழின இன அழிப்பு நினைவுச்சின்னம் சேதப்படுத்தப் பட்டுள்ளதாக சமுக வலைத்தளங் களில் செய்திகள் பரவியுள்ளன.

இந்த செய்தி மக்களை விச னப்படுத்திய நிலையில் பிரதான நினைவு சின்னத்துக்கு எந்த வித சேதமும் ஏற்படவில்லையென தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் நினைவுச்சின்னம் உள்ள இடத்தில் பொருத்தப்பட்ட சில மின்குமிழ்கள் மட்டும் உடைக் கப்பட்டன என தெரிவிக்கப்படு கிறது.

இந்த விடயம் தற்போது பிரம்டன் நகர பொலிஸின் கவனத் திற்கு கொண்டு செல்லபட்டுள் ளது.

உலகில் இடம்பெற்ற இனப் படுகொலைகளின் துன்பியல் வரலாற்றைக் கூறும் வரலாற்று அடையாளங்களில் ஒன்றாக இந்த நினைவுச்சின்னம் இந்த மாதத்தின் ஆரம்பத்தில் முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் நாள் வருவதற்கு முன்னர் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

இந்த நினைவுத் தூபியின் உரு வாக்கத்துக்கு ஆரம்பம் முதலே இலங்கை அரசாங்கங்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியதுடன், கனடாவில் வாழும் சிங்கள மக்கள் எதிர்ப்பு போராட்டங்களை நடத்தியிருந்தனர்.

ஆனால் இவ்வாறான எதிர்ப்பு களை முறியடித்து இந்த நினைவுச் சின்னம் உருவாக்கப்பட்டிருந்தது. இந்த நினைவுச் சின்னத்தை தமிழ் இனப்படுகொலை நினைவுச் சின்னம் என அழைக்கக்கூடா தென தற்போது ஆட்சியில் உள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்க மும் கண்டனம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்காவின் பகுதியாக இணைந்தால் கோல்டன் டோம் பாதுகாப்பு இலவசம்

## கனடாவுக்கு ட்ரம்ப் சலுகை

கனடாஅமெரிக்காவின்ஒருபகுதி யாகமாறினால்,கோல்டன்டோம்பாது காப்பு அமைப்பில் கனடா இலவச மாக இணையலாம் என்று அமெ ரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ட்ரூத் சமூக ஊடக தளத்தில் ட்ரம்ப் வெளியிட்டுள்ள பதிவில்,

“எங்களின் அற்புதமான கோல் டன் டோம் பாதுகாப்பு அமைப்பில் ஓர் அங்கமாக விரும்பும் கனடாவ-ிடம், ஒரு தனித்த சுதந்திர தேசமாக சேர விரும்பினால் 61 பில்லியன் டொலர் அதற்காக செலவாகும். ஆனால், அவர்கள் எங்களின் நேச-த்துக்குரிய 51 ஆவது மாநிலமாக மாறினால் ஒரு

C2 ▶





# கரடி தாக்கி பெண் காயம்

கனடாவின் பிரிடிஷ் கொலம்பியா மாகாணத்தில் கரடி தாக்கி பெண் ஒருவர் காயமடைந்துள்ளார்.

வான்கூவர் அருகே உள்ள அன்மோர் கிராமத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் வனவிலங்கு அதிகாரிகள் தற்போது தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

பிசி கன்சர்வேஷன் ஆபிசர் சர்வீஸ் தெரிவித்ததின்படி, செவ்வாய்க்கிழமை மதியத்திற்கு முன், பாதிக்கப்பட்ட பெண் தன் வீட்டிற்கு அருகே நடந்து சென்றபோது, அவரது வீட்டின் மூலையிலிருந்து ஒரு கரடி திடீரென தென்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

"அந்த கரடி விரட்ட முயன்றும், அது தொடர்ந்து நெருங்கியதே தவிர, பின்னடைவே இல்லை," என்று அதிகாரிகள் கூறினர். பின்னர் அந்த கரடி பெண்ணை கடித்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

தோட்டத் தண்ணீர் குழாயைப் பயன்படுத்தி கரடி மீது பாய்ச்சி, அவர் ஓடி தப்பித்துள்ளார் என சமூக ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

பெண்ணுக்கு ஏற்பட்ட காயங்கள் உயிருக்கு ஆபத்தானவை அல்ல என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், சம்பவ இடத்திற்கு சென்ற அதிகாரிகளினால் அந்த கரடியை கண்டு பிடிக்க முடியவில்லை.

அந்த பகுதியில் தற்போது கரடி பிடிக்க வலையமைக்கப்பட்டு விசாரணை தொடருகிறது.

---

**அமெரிக்காவின்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டொலர் கூட செலவாகாது என்று நான் தெரிவித்தேன். அவர்கள் சலுகையை பரிசீலனை செய்து வருகின்றனர்." என்று தெரிவித்துள்ளார்.

தனது தேர்தல் வெற்றிக்கு பின்பு கனடா பிரதமர் மார்க் கார்னி, மே மாதத்தின் தொடக்கத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது இரண்டு நாட்டுத் தலைவர்களும் கோல்டன் டோம் திட்டம் பற்றிப் பேசினார்.

கடந்த வாரத்தில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் கோல்டன் டோம் பாதுகாப்பு அமைப்பு குறித்து பேச்சுவார்த்தை நடந்து வருவதாக தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், "இது கனடாவுக்கு சிறந்த யோசனையா? ஆமாம், கனடா மக்கள் பாதுகாப்பாக இருப்பது நல்லதுதான். என்றாலும், கனடா விற்பனைக்கு இல்லை. ஒரு போதும் விற்பனைக்கு கிடைக்காது." என்று தெரிவித்திருந்தார்.

ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியாக பதவி ஏற்றதில் இருந்து அமெரிக்கா – 



கனடா இடையேயான உறவுகள் கடினமாகி வருகின்றன. அவரின் கூடுதல் வரி எச்சரிக்கை, கனடாவை அமெரிக்காவுடன் இணைப்பது குறித்த அழுத்தம் போன்றவை இரண்டு நாடுகளுக்கு இடையேயான உறவை மோசமடையச் செய்து வருகிறது.

கோல்டன் டோம் என்பது, அமெரிக்காவின் ஒரு பாதுகாப்பு அமைப்பாகும். அறிக்கைகளின் படி, 175 பில்லியன் டொலர் மதிப்பிலான இந்த ஏவுகணை பாதுகாப்பு கேடயம் போன்ற அமைப்பு, பாலிஸ்டிக் ஏவுகணைகள் மற்றும் ஹைப்பர் சோனிக் ஆயுதங்கள் போன்ற நவீன அச்சுறுத்தல்களில் இருந்து நாட்டை பாதுகாக்கும்.

இந்த அமைப்பு 2029 இற்குள் செயல்பாட்டுக்கு வரும். அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கூற்றுப்படி, விண்வெளியில் இருந்து ஏவுகணைகள் ஏவப்பட்டாலும் கோல்டன் டோம் அமைப்பு அவர்களைப் பாதுகாக்கும்.

# கடும் வெப்ப அலை குறித்து ஆல்பேர்டாவில் எச்சரிக்கை



கனடாவின் ஆல்பேர்டா மாகாணத்தின் பெரும்பாலான பகுதிகளில் உயர் அழுத்த மண்டலத்தால் கடும் வெப்பநிலை நிலவுவதால், கனடா சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் துறை வெப்ப எச்சரிக்கை விடுத்துள்ளது.

கால்கரி நகரம் உள்ளிட்ட பெரும்பாலான இடங்களுக்கு இது பொருந்துகிறது.

ஆனால் பன்ஃப், லெத்பிரிட்ஜ், மெடிசின் ஹாட் போன்ற தெற்குப் பரப்புப் பகுதிகள் தற்போது இந்த எச்சரிக்கையின் கீழ் இல்லை.

அல்பேர்டா, சாஸ்கட்செவன், மனிடோபா ஆகிய மாகாணங்களில் காட்டுத் தீ அபாய அளவீட்டு குறியீடு மிகவும் உயர்ந்தது அல்லது அதிகம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இது வெப்பம் மற்றும் வறண்ட நிலைமையால் காட்டுத் தீ பரவும் வாய்ப்பு அதிகமுள்ளதை காட்டுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த உயர் அழுத்த மண்டலத்திற்குள் ஒரு வேகமான குறுகிய அலை உருவாகி, தென் பிரிட்டிஷ் கொலம்பியாவில் மழை மற்றும் சூறாவளியை ஏற்படுத்தும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.




# பேச்சுவார்த்தைக்கு திரும்பிய கனடா அஞ்சல் ஊழியர் சங்கம்

கனடா அஞ்சல் நிறுவனத்திற்கும் அதன் 55,000 ஊழியர்களைக் கொண்ட கனடிய அஞ்சல் ஊழியர் சங்கம் இடையிலான தொழிலாளர் விவகாரம் மீண்டும் புதிய திருப்பத்தை எடுத்துள்ளது.

மேலதிக நேர பணியைத் தடை செய்யும் முடிவில் சங்கம் இருந்தாலும், இரு தரப்பும் மீண்டும் பேச்சுவார்த்தை மேசையை நோக்கிச் செல்லத் திட்டமிட்டுள்ளன.

சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர்கள் வைத்துள்ள புதிய கோரிக்கைகளுக்கு கனடா அஞ்சல் நிறுவனம் பதிலளிக்க இருக்கிறது எனக் கூறப்பட்டுள்ளது.

- சம்பள உயர்வுகள் மற்றும் பிற இழப்பீடுகள்
- பகுதி நேர ஊழியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது
- வார இறுதி நாட்களில் அஞ்சல் விநியோகம் போன்ற விடயங்கள்.

இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சங்கம் கடந்த வெள்ளிக்கிழமை முதலே வேலைநிறுத்தத்திற்கு செல்லும் உரிமையுடன் இருந்தாலும், மக்கள் சேவையை பாதிக்காமல் இருக்க மேலதிக நேர பணியைத் தடை செய்வதாகவே முடிவு செய்தது.

கடந்த வாரம் அவர்களிடம் வந்த பார்சல் எண்ணிக்கை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 50 வீதம் குறைந்துள்ளது என்றும், அது தொடர்ந்து வீழ்ச்சிமயமாக இருக்கிறது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.